
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குயில் பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் குயில் பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

**இதனுள்ளே**

1. சுத்தவெளியே மெய்ப்பொருள்:
2. வீட்டின்பம் வழங்கியவன்
3. .பிரம்ம ஞானம்
4. ஆட்கொண்ட வள்ளல்
5. அடியவர் ஆசையை அறுப்பான்
6. ஆனந்தமே பிரம்மம்
7. எல்லா உயிர்களுக்கும் அரசன்
8. மகான்களின் பார்வையில் வெட்டவெளி
9. பாசம் அறுத்து எனை ஆண்டவன்
10. பிரம்மமே அறிவு, அதுவே “நான்”

ஒரு பெண் சிவபெருமானை தலைவனாக எண்ணுகிறாள். அவரைக் காணவில்லை என்ற ஏக்கத்தால் குயிலிடம் புலம்புகிறாள். “அவர் இங்கே வரவேண்டும். அதற்காக நீ கூவு” என்கிறாள். இந்தப் பகுதியில் பத்து பாடல்கள் உள்ளன. இவை திலையில் அருளப்பட்டவை.

## 1.சுத்தவெளியே மெய்ப்பொருள்

சுத்தவெளி (Absolute SPACE) ஒரு வெற்றிடம் இல்லை, அதுவே எல்லாம் வல்ல, பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றையும் விட சக்தி வாய்ந்த ஒரு பொருள். அதன் இயல்பான ஆற்றல் தன்னிறுக்கம்,

அது எப்பொழுதும் தன்னைத் தானே இறுக்கிக் கொள்ளும் தன்மையுடையது. இந்த இறுக்கம் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் குவியும் பொழுது, அந்த புள்ளியில் இறுக்கம் அதிகரித்து, ஒரு கட்டத்தில் அதை மேலும் இருக்க முடியாத நிலை வரும் பொழுது, சுத்தவெளி அந்த புள்ளியை மையமாகக் கொண்டு சுழலத் தொடங்குகிறது.

அதாவது ஒரு புள்ளியில் குவிந்து கொண்டே இருக்கும் ஆற்றல் மேலும் அந்த புள்ளியில் குவிய முடியாமல், பிதுங்கி தன் திசையை மாற்றி, அந்த புள்ளியில் இருந்து வழிந்து, திரும்பி செல்கிறது.

திரும்பிய ஆற்றல் நேராக செல்ல முடியுமா? முடியாது, ஏனென்றால் சுத்தவெளியிலிருந்து சூழ்ந்தழுத்தும் ஆற்றல் வந்து கொண்டே இருக்கிறது.

ஆகையால் வழிந்து வரும் அந்த ஆற்றல் சுழன்று சுழன்று வெளியே செல்கிறது. ஆகையால் அந்த இடம் சுழலத் தொடங்குகிறது.

உதாரணம்: ஒரு கால் பந்தை எடுத்துக்கொள்வோம், அது நிலையாக ஒரு இடத்தில் இருக்கிறது, ஒரு குழாயின் மூலம் தண்ணீரை வேகமாக இந்த பந்தின் எதாவது ஒரு பக்கத்தில் செலுத்தினால் என்ன ஆகும்?



பந்து தண்ணீர் வந்த திசையிலேயே உருண்டு செல்லும். இப்பொழுது, அதே பந்தை எல்லா திசைகளிலும் ஒரே அளவு விசையுள்ள தண்ணீரை கொண்டு தாக்கினால் என்ன ஆகும்?

பந்து, அந்த இடத்திலேயே சுழல ஆரம்பித்துவிடும். இதே தான் சுத்தவேளியிலும் நடக்கிறது.

சரி, சுத்தவெளி சுழல ஆரம்பித்து விட்டது, அடுத்த கட்டம் என்ன?

தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும் சூழ்ந்தழுத்த ஆற்றல் அந்த சுழலையை மிக மிக சிறிய அளவிற்கு இறுக்கி ஒரு நுண்ணிய சுழலையாக மாற்றுகிறது.

இந்த நுண்ணிய அதி வேக தற்சுழற்சி கொண்ட சுழலையே விண் துகள் (அல்லது) பரமாணு என்று மதிக்கப்படுகிறது.

இதே பரமாணு உயிர்களிடத்தில் உயிராகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த ஒரு துகளைத்தான் நவீன அறிவியலாளர்கள் "GOD particle" என்று பெயர் வைத்து தேடிக்கொண்டு இருக்கின்றனர். ஆனால் இந்த பரமாணு எந்த ஒரு அறிவியல் கருவிக்கும் அகப்படாது, ஆற்றலிலிருந்து தள்ளும் ஆற்றல்:

சுத்தவெளி தொடர்ந்து தன்னை இறுக்கிக்கொண்டே இருக்கிறது, இது வரை ஒரு புள்ளியில் குவிந்த ஆற்றல் முழுவதும் இறுகி குறுகி நுண்ணிய தற்சுழற்சி விரைவு கொண்ட விண் துகளாக மாறிவிட்டது,

இதற்கு மேலும் வந்து கொண்டே இருக்கும் அந்த இறுக்க ஆற்றல் சுழலும் விண் மீது ஒரு உரசலை ஏற்படுத்துகிறது, ஒரு கத்தியை சாணம் பிடிக்கும் பொழுது கோடானு கோடி நெருப்பலைகள் உருவாவது போல், விண் துகளுக்கும் சுத்தவேளிக்கும் ஏற்படும்

உரசலினால் கோடானு கோடி விரிவலைகள் சுழலும் விண் துகளிலிருந்து பிறந்து விரிந்து சுத்தவெளியில் கலக்கிறது.

விண்ணின் சுழற்சியால் எப்பொழுதும் வந்து கொண்டே இருக்கும் இந்த விரிவலைகள் தள்ளும் சக்தியாக இயங்குகிறது, மற்றொரு விண் துகளை தன் அருகே சேர்க்காமல் தள்ளி நிறுத்துகிறது.

சுத்தவெளியின் இறுக்க ஆற்றலே தள்ளும் சக்தியாகவும் பரிணமித்துள்ளது. (ஒன்றே பலவாச்சு). (வேதாத்திரி மகரிஷி)

சுத்தவெளி என்ற சிவனின் தன்மையை திருவாசகம் இந்தப் பாட்டில் சொல்கிறது.

"கீதம் இனிய குயிலே
    கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
    பாதாளம் ஏழினுக்கு அப்பால்
சோதி மணிமுடி சொல்லில்
    சொல் இறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும்
    இல்லான் அந்தமி லான்வரக் கூவாய்". (திருவா.பா.348)

- இனிய குரலுடைய குயிலே!
- எங்கள் பெருமானைப் பற்றிக் கேட்பாயேல்,
- அவனது திருவடிகள் இரண்டும் கீழ் ஏழ் உலகங்களையும் கடந்து நிற்பன.
- ஒளி பொருந்திய அழகிய திருமுடி பற்றிக் கேட்பாயானால்,
- அது சொல் அளவைக்கு அப்பாற்பட்டு நிற்பது.
- மிகவும் பழமையானவன்.
- தொடக்கம் இல்லாதவன்.
- முக்கண வசபபடாதவன்.
- அவனுக்கு முடிவும் இல்லை என்பதை எல்லாம் தெரிந்து கொண்டு, அவனை வருமாறு கூவி அழைப்பாயாக!

"அழுத்தம் என்னும் உந்தாற்றல் ஒன்றைக் கொண்டே

அணுமுதலாய் அண்டகோடி அனைத்தும் ஆக்கி
வழுத்துமோர் அறிவுமுதல் ஐந்தும் ஆறும்
வகைவகையாய் உயிரினங்கள் தோற்றுவித்து
முழுத்திறனுடன் காத்து முடிக்கும் மேலாம்
முழுமுதற்பொருளே நம்மறிவாய் ஆற்றும்" (ஞாக.பா.3)

என்ற வேதாத்தரிய வரிகள், காத்தல், முடித்தல் ஆகிய முத்தொழி லகைள் புரிகின்ற முழுமுதற் பொருளே நம்மில் அறிவாக இயங்குகிறது என்ற வேதாத்திரிய ஞானம் "சத்தியம், ஞானம், அனந்தம், பிரம்மன், "அகம் பிரம்மாஸ்மி" போன்ற வேதாந்த சத்தியங்களை நமக்கு தெளிவாக்குகிறது.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2. வீட்டின்பம் வழங்கியவன்

"மனிதன் பிறந்தது முதல் முடிவு வரையில் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் வாழ்வதற்கு அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நால்வகைப் பேறுகளும் அடையவேண்டும்.

புலனின்பம் கெடாமல் காக்க மக்களோடு கொள்ளும் உறவில் அளவுமுறை கண்டு விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு அறநெறி வழுவாத முறையில் பொருளும் இன்பமும் பெற்று வாழ்ந்தால் அறிவு நாளுக்கு நாள் சிறப்புற்று மேலோங்கி இறையுணர்வு பெற்று நிறைவான வாழ்க்கை எய்த முடியும்.

சுருக்கமாக சொல்வதென்றால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வகைப் பேறுகளும் மனிதன் வாழ்வின் நிறைவுக்காகப் பெற வேண்டும்.

ஆயினும் இந்த நான்கில் ஒன்றால் மற்றொன்று கெடாமல் பார்த்து பெற்று துய்க்க வேண்டும்.

.

வீடு பேறு எனும் சொல்லின் பொருள், வீடு எனில் இடம் என்று பொருள். நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் உலகத்தின் மீது உலகம் உயிர்கட்கு இடமாக இருக்கிறது.

உலகம், எங்கு எந்த இடத்தில் இருக்கிறது. அது சூரிய குடும்பத்தில் உருண்டு, மிதந்து உலவிக் கொண்டிருக்கிறது.

சூரிய குடும்பம் எங்கே இருக்கிறது. எந்த இடத்தில் இருக்கிறது. சுத்தவெளியான இருப்பு நிலையே சூரிய குடும்பத்துக்கு இடம்.

வீடில்லா வீடு சுத்தவெளி. இவ்வெளியே எல்லாப் பொருட்களிலும் நிறைவாகவும் இயக்க ஒழுங்கான அறிவாகவும் இருக்கிறது.

.

மனிதனின் அறிவு உயர்ந்து தன்னை அறிந்து கொள்ளும் நிலையில் அறிவே மெய்ப்பொருளாக இருப்பு நிலையாகக் காட்சியாகும்.

வீடில்லா வீட்டின் வெட்ட வெளியே அறிவாக அறிவே தானாக உணரும் போது தான் வீடுபேறு. வீடுபேறு பெற்ற நிலையில் அறம் இயல்பாகும். அறவழியில் பொருளும் இன்பமும் பெற்று துய்க்கும் போது தான் அறிவிற்கு வீடுபேறு கிட்டும்.

இவ்வாறு அறமும் வீடுபேறும் மனித அறிவில் ஒன்றோடு ஒன்றாக ஒன்றில் ஒன்றாகத் தொக்கி நிற்கின்றன.

பிறவியின் பெருநோக்கத்தை எய்த அறத்தின் மூலமே பொருள், இன்பம், வீடுபேறு இவைகளைப் பெறுவோம். வளமுடனும் நலமுடனும் நிறைவுடனும் வாழ்வோம் என்கிறார் – தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி.

வீடு பேரின்பம் குறித்து மாணிக்கவாசகர் இந்த திருவாசகப் பாடலில் பாடுகிறார்.

“ஏர்தரும் ஏழுலகு ஏத்த
    எவ்வுரு வும் தன் உருவாய்

ஆர்கலி சூழ்தென் இலங்கை
    அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
    பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயால் குயிலே
    தென்பாண்டி நாடனைக் கூவாய்.” (திருவாச.பா.349)

- ஏழு உலகங்களிலும் காணப்படும் புகழும்படியான அழகிய உருவங்கள் அனைத்தும் தன்னுடைய உருவமாகக் கொண்டவன்.
- ஒலிக்கும் கடலால் சூழப்பட்ட தென் திசையிலுள்ள இலங்கையில் அழகிய மண்டோதரிக்கு அருள் பாலித்து, வீட்டின்பம் வழங்கியவன்.
- திருப்பெருந் துறையில் எழுந்தருளி இருக்கும் பெருமான்.
- தென்பாண்டி நாட்டுக்கு உரியவன்.
- குயிலே! நீ அவனைக் கூவி அழைப்பாயாகா!
  யயய

## அறிவின் அக நோக்குப் பயணம் - வேதாத்தரியம்

“ஆன்மிகத் துறையென்ற அகல வழிப்பாதையிலே
அடிவைத்து மென்மேலும் முன்னேறிப் போகுங்கால்
அறிவுபெறும் அனுபவங்கள் வியப்பாகும், இனிமையாம்
ஆன்மஒளி சுடர்விட்டு உள்ளுணர்வுப் பேறாகும்.”

.

“திறந்துகொள் தான் தனது என்று சொல்லும்
சிற்றறையை, வெளியேவா, அகன்று நோக்கி
பறந்துலவு உலக சமுதாயத்தின் பரப்பகத்தில்
பற்று அறும் கடமையினால் பழுக்கும் ஞானம்.”

.

“தெய்வ அறிவே திருந்திய அறிவாம்;
உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே;
செய்யும் வினைகளைச் சீரமைத்திட
ஐயமில்லை அறும் பிறவித்தொடர்.” (ஞாக.பா.1431)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 3.பிரம்ம ஞானம்

தெய்வம் இறைநிலை கடவுள், பரம்பொருள் பிரம்மம் எனும் சொற்கள் யாவும் பிரபஞ்சத்தின் மூலப்பொருளான ஒரே தத்துவத்தைக் குறிப்பன ஆகும்.

நுண்ணணு முதலாக அவற்றின் கூட்டுத் தோற்றங்கள் அனைத்ததையும் ஒருசேரக் குறிக்கும் வார்த்தைதான் பேரியக்க மண்டலம்.

இந்தப் பெரு மண்டலத்தின் தோற்றங்களையும் ஆற்றல்களையும் புலன்களால் தனித்தனியே எல்லை கட்டியும் அவற்றுக்குத் தனித்தனியே பெயர் வைத்தும் அழைப்பது மனிதனிடம் அமைந்துள்ள ஆறாவது அறிவின் சிறப்பு ஆகும்.

மரம் என்ற ஒரு தோற்றத்தைப் பகுத்துணர்வால் அடித் தண்டு கிளைகள் இலைகள் பூக்கள் காய்கள் பழங்கள் என்று பல பெயர்களால் அழைக்கிறோம்.

இவையெல்லாம் மரம் என்ற ஒரே தோற்றத்தின் உறுப்புகளேயாகும். அவையனைத்தையும் சேர்த்து முழுமையாக ஒரு சொல்லில் கூறும் போது மரம் என்று கூறுகிறோம்.

இதே போன்று அணுக்கள் பஞ்சபூதம், கோள்கள் சூரியன் உலகம் உயிர்கள் என்று கூறுவதெல்லாம் ஒரே ஒரு இறை நிலையின் பரிணாமத்தால் மலர்ந்துள்ள பேரியக்க மண்டலத்தின் கூறுகளேயாகும். எந்தத் தோற்றமானாலும் ஒரு வடிவம் உண்டு. அதற்கு உட்பொருளாக அமைந்த சில தன்மைகளும் உண்டு.

எந்தப் பரு உருவத் தோற்றம் ஆனாலும் அது அமைவது முதல்தர நுண்விண் எனும் வேதான்களினது கூட்டுச் சேர்க்கையால் தான். அவ்வாறு அமைந்துள்ள ஒவ்வொரு வடிவத்திலும் உட்பொருளாகத்

தன்மைகளை அமைப்பது இரண்டாம் கட்ட நுண்விண்களான யோகான்கள் தான்.

இரண்டாம் நிலை நுண்விண் யோகான்கள்தான் இறைவெளியின் சூழ்ந்தழுத்த ஆற்றலைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கரைந்து இறைவெளியோடு கலந்து விடும்போது அக்கலவைதான் காந்த ஆற்றலாக மாறுகிறது.

இக்காந்த ஆற்றலானது எல்லாச் சடபொருட்களிலும் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் தன் மாத்திரைகளாகச் சிறப்புற்று அவற்றின் உள்ளமைந்த தன்மைகளாக விளங்குகிறது.

இதே காந்த ஆற்றல் உயிர் உடல்களில் மேலே விளக்கிய ஐவகை மாற்றங்களோடு மனமாகவும் இயங்குகின்றது. இறைவெளியே தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் அதன் நுண்பகுதி மடிப்பு விழுந்து அதுவே தனது சூழ்ந்தழுத்தும் தன்மையால் தற்சுழற்சி பெற்று இயங்கிக் கொண்டு இருக்கின்றது. இந்த நுண்துகள்தான் வேதான் எனும் நுண்ணணுவாகும்.

இதுதான் விஞ்ஞான மொழியில் முதல்நிலை நுண்விண் என்று வழங்கப்படுகிறது.

இந்த வேதான் விண் விரைவாகத் தற்சுழற்சியோடு இயங்கும்போது அதைச்சுற்றியும் சூழ்ந்தும் இருப்பது என்ன என்று பார்த்தால் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் இறைவெளிதான் எனத் தெரியவரும்.

இவ்விரண்டு தத்துவங்களுக்கிடையே அவற்றின் உரசலால் நிகழும் விளைவு தான் விஞ்ஞானிகட்கும் தத்துவஞானிகட்கும் எளிதில் புலப்படாத நுண்ணலைகளாகிய வான்காந்தம்.

இந்த நுண்ணலைகளானவை முதலில் நுண்ணிய அலைகளாக எழுந்தபோதும் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலாகிய இறைவெளியின் அழுத்தத்தால் கோளவடிவம் பெற்று இவையும் வேதான் எனும் முதல்நிலை விண்போன்றே தற்சுழற்சியோடு இயங்குகின்றன.

எனினும் வேதான் எனும் முதல் நிலை விண்களைவிட இவை தற்சுழல் விரைவில் மிகவும் குறைந்தவையாகையால் குறுகிய காலத்தில் அவை விரைவு குறைந்து நிலை பொருளாகிய இறைவெளியோடு கலந்து மறைந்துவிடும்.

இக்காரணத்தினால் இரண்டாம் நிலை விண்ணை நிழல் விண் என்று அழைக்கிறோம். நமது விஞ்ஞானக் குழுவினர் இந்த விண்ணுக்கு யோகான் என்ற பெயரினை வைத்து இருக்கிறார்கள்.

பூரணம் பேராற்றல் பேரறிவு எனும் மூன்றையும் இருப்பு நிலையாகக் கொண்ட இறைநிலையின் பேராற்றல் பரிணாமச் சிறப்பால் இறுதியாக முழுமைத்தகுதி பெற்றவன் மனிதன்.

பேராற்றல் எனும் தத்துவம் பரிணாமத்தின் நியதியால் அணுவிலிருந்து பஞ்ச பூதங்களாகி அண்டங்கள் பலவாகி உலகமாகி முடிவில் உருவ அமைப்பில் உறுப்புகள் சிறப்போடு அமைந்துள்ளது மனித உருவம்.

மேலும் இறைநிலையில் இருப்பாக இருந்த பேரறிவானது அணுமுதலாக பஞ்சபூதங்கள் அண்டங்கள் அனைத்துத் தோற்றங்களிலும் இயக்க ஒழுங்கு என்னும் தன்மையாகவும் பஞ்சதன் மாத்திரைகள் எ   ன ம் அழுத்தம்□ ஒளி□ ஒலி□ சுவை□ மணம் இவையாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதுவே மனிதனிடத்தில் இறைநிலை□ விண்நிலை□ மனம் ஆகிய மூன்று மறை பொருள்களையும் அறியும் ஆறாம் நிலை அறிவை உடைய எண்ணமாகவும் திகழ்கிறது.

பேரியக்க மண்டலத்தில் காணும் எல்லாத் தோற்றங்களிலும் பரு உருவ வடிவங்கள் அனைத்தும் வேதான் எனும் முதல் விண்கள் கூட்டுத்தான் அவற்றினது உட்பொருளாக ஆன்மாவாக தன்மைகளாக விளங்குவது யோகான் என்னும் இரண்டாம் நிலை நிழல் விண்களின் தன்மாற்ற அலை நிகழ்ச்சிகளே!

சுருக்கமாகக் கூறுமிடத்து இறைநிலையின் பேராற்றலினுடைய பரிணாமம் வேதான் முதல் அலை வடிவ தோற்றங்கள் அனைத்துமாம். பேரறிவோ யோகான் விண் முதலான அனைத்துத் தன்மைகளுமாகும்.

முதல் நிலை விண்களான விரைவான தற்சுழற்சியுடைய வேதான் என்கின்ற நுண்ணணுக்களுக்கும் இறைவெளியின் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலுக்கும் இடையே ஏற்படும் உரசலால் விளைந்த அலைகள்தாம்.

நிழல் விண்கள் எனும் காந்தம். இறைவெளியின் சூழ்ந்தழுத்த ஆற்றலைத் தாங்க முடியாமல் அவை சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட காலத்தில் இறைவெளியோட கலந்து விடுகின்றன.

இந்தக் கரைதல் எனும் நிகழ்ச்சியானது விண்வெளியில் அழுத்தமாகவும் காற்றில் ஒலியாகவும் அமுத்தக் காற்றில் ஒளியாகவும் நீரில் சுவையாகவும் கெட்டிப் பொருட்களில் மணமாகவும் சீவ இனங்களில் மனமாகவும் தன்மாற்றம் பெறுகிறது.

அழுத்தம் முதல் மனம் வரையிலான ஆறு இயக்கங்களும் ஆன்மா என்று கருதப்படுகின்றன. இதனால் முதல்நிலை விண்கூடினால் பரு உருவங்கள் உண்டாகின்றன என்றும் இரண்டாம் நிலை நிழல் விண்களால் அந்த உருவங்களுக்குத் தன்மைகள் அமைகின்றன என்றும் அறிந்து கொள்வோம்.

“ஞானம் விளங்க இருந்த நாயக னைவரக் கூவாய்” என்று திருவாசகம் இப்பாடலில் சொல்லுகிறது.

“நீல உருவின் குயிலே
நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகின் திகழும்
கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய
திரு உத் தரகோச மங்கை
ஞானம் விளங்க இருந்த

நாயக னைவரக் கூவாய்" (திருவாச.பா.350)

- நீலநிற வடிவில் காணப்படும் குயிலே!
- அழகிய மாடங்கள் நிறைந்ததும்.
- அழகில் சிறந்து விளங்குவதும்,
- பூங்கொடி போன்ற உமை எழுந்தருளி இருப்பதும்.
- ஒழுக்கம் உடையார் நிரம்ப வாழ்வதும்.
- ஆகிய திரு உத்தரகோச மங்கையில் உலகறிய வீற்றிருக்கும சிவபெருமானை வருமாறு கூவி அழைப்பாயாக!

பேரியக்க மண்டல பரிணாமச் சரித்திரத்தை எளிதில் பதிவு செய்து கொள்ளவும் ஏற்ற வகையில் எழுதப் பெற்ற இரண்டு கவிகளை வேதாத்திரியம் தந்துள்ளது.

இறைவெளியே தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல்
இதன்திணிவு மடிப்புவிழச் சுழலும்நுண் விண்ணாம்.
நிறைவெளியில் விண்சுழல நெருக்குகின்ற உரசல்
நிலைவெளியில் எழுப்புகின்ற நேரலைகள் காந்தமாம்.
மறைபொருளாம் காந்தம்தன் மாத்திரைகள் ஐவகை.
மலைக்காதீர் விண்கூட்டம் மாபூதம் ஐந்துமாம்.
முறையாய்அக் காந்தஅலை மனமாம்உயிர் உடல்களில்
மதிஉயர்ந்திவ் வுண்மைபெற மாபிரம்ம
ஞானமாம்!(ஞாக.பா.1719)

## வேதாத்திரிய பிரம்ம ஞானம்

பேரியக்க மண்டலத்ததைத் தத்துவங்கள்
பத்தாக விளங்கிக் கொள்வோம்.
பெரியசுமை மனதிலிருந் திறங்கிவிடும்
மனம்அறிவாம் சிவமு மாகும்.
ஓரியக்க மற்றநிலை வெட்டவெளி
இருப்ப துவே; ஆதி யாகும்.
உள்ளமைந்த ஆற்றலே உருண்டியங்கும்
விண்ணாகும். அதிலெ ழுந்த

நேரியக்க விரிவுஅலை நெடுவெளியில்
　கலப்புறவான் காந்த மாச்சு.
நிகழ்காந்தத் தன்மாற்றம் அழுத்தம்ஒலி
　ஒளிசுவையும் மணம்மனம்ஆம்.
சீரியக்கச் சிறப்புகளை விளைவுகளை
　உள்ளுணர்ந்தால் அதுமெய்ஞ் ஞானம்.
சிந்திப்போம் உணர்ந்திடுவோம். சேர்ந்திருப்போம்
　இறைநிலையோ டென்றும் எங்கும்! (ஞாக.பா.1674)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 4. ஆட்கொண்ட வள்ளல்

விழுப்புரத்துக்கு அருகில் கல்பட்டு என்ற அழகிய சிற்றூர் உள்ளது. இந்த ஊரில் பிறந்தவர் கல்பட்டு ஐயா என்ற ஞானி.

அவரது இயற்பெயர் ராமலிங்கம். சின்னஞ்சிறு வயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறி தமிழகமெங்கும் சுற்றித் திரிந்தார். வழிகாட்டும் குரு எவரும் இவருக்கு வாய்க்கவில்லை.

அப்புறம்தான், குருவைத் தேடி வேறெங்கும் செல்லவேண்டாம் என்ற ஞானம் அவருக்கு வந்தது. விருத்தாசலம் அருகே திருநறுங் குன்றத்தில் இருந்த குன்றுகளில் ஒன்றில் குடிசை போட்டுக்கொண்டு நிட்டையில் அமர்ந்தார்.

தன்னை நாடிவரும் அன்பர்களிடம் தனது ஞானாசிரியன் இன்ன மாதத்தில், இன்ன கிழமையில், இன்ன நாழிகையில் வருவார் என்று சொல்லிவிட்டு காத்திருக்கிறார். பலரும் கூடி நிற்கின்றனர்.

எங்கெங்கு இருந்து ஏதேது வேண்டினும் அங்கங்கு அருளும் அருட்பெருஞ்ஜோதி – என்று பாடிய வள்ளல் பெருமான் தமது சீடரைத் தேடிப் புறப்பட்டார்.

மாட்டுவண்டி செல்கிறது. வண்டியைத் திருக்கோவிலூருக்கு அனுப்பிவிட்டு தாம் மட்டும் நறுங்குன்றத்திற்கு நடந்தே செல்கிறார் வள்ளல் பெருமான். குன்றின் மீதேறிச் செல்கிறார். அங்கிருந்த குடிசையின் உள்ளே குனிந்து நுழைகிறார்.

கல்பட்டு ஐயா கண்விழித்தபோது வள்ளல் பெருமானின் அழகிய திருவடிகள் கண்ணில் படுகின்றன. நெடுஞ்சாண் கிடையாகக் காலில் வீழ்ந்த கல்பட்டு ஐயாவை கைதொட்டுத் தூக்கினார் வள்ளலார்.

'ஆட்கொள்ள வேண்டும் ஐயனே' என்று அரற்றினார் கல்பட்டு ஐயா. 'உத்தரவு வரும் காத்திரு' என்று கூறிவிட்டு புறப்பட்டு விட்டார் வள்ளலார்.

## கருங்குழி வந்தது

வடலூரில் சத்திய தருமச் சாலை தொடங்கப்படாத காலம். ஆனாலும் தம்மைத் தேடி வள்ளலார் வந்து சென்ற சிறிது காலத்துக்கெல்லாம் புறப்பட்டுவிட்டார் கல்பட்டு ஐயா.

ஆம், இராமலிங்கத்தைத் தேடி இராமலிங்கம் புறப்பட்டுவிட்டது. கோடைக் காற்றிலே தாடி பறக்க, கண்கள் அடிவானத்திற்கு அப்பால் லயிக்க, கையிலே கம்புடன் சுடுமணலில் கால் கொப்பளிக்க வேகமாக விரைகிறது; வாட்ட சாட்டமான அந்தச் சிவந்த உருவம்.

இடையில் ஒரு சிற்றாடை, தோளிலே துண்டு, கையிலே கம்பு. கல்பட்டு ஐயாவை வரைந்துகாட்ட ஒரு வரி போதும். பசியோ வாட்டுகிறது. தாகம் நாவைச் சுருட்டுகிறது. 'போ, தேடிச்செல்' – உந்தித் தள்ளுகிறது மனம். தேடலில் தெளிந்தது திசை. கருங்குழி வந்தாயிற்று.

அதற்கு முன்னரே வள்ளல் பெருமான் தமது தொண்டர்களைக் கூழ் கரைத்து வைக்குமாறு கூறியிருந்தார். தொண்டர்களுக்குப் புரியவில்லை. யாருக்காக? கேள்வி எல்லோர் மனத்தையும்

குடைகிறது.

நேராக உள்ளே நுழைந்த அந்த உருவம் கருணை வள்ளலின் காலடியில் வீழ்ந்தது. அழுதது, சிரித்தது.

இருகரம் நீட்டி வள்ளல் வார்த்த கூழினை வாங்கிப் பருகியது. பருகிக் கொண்டே இருந்தது. வயிறு நிறைந்தும் நிறுத்தவில்லை. ஊற்ற, ஊற்ற இன்னும் இன்னும் என்று வாங்கி குடித்துக் கொண்டே இருந்தார் கல்பட்டு ஐயா.

‘போதாதாங்காணும்?’ என்று கேட்டு கூழ் வார்ப்பதை நிறுத்தினார் பெருமான்.

போதும் என்று சொல்ல மனம் வரவில்லை. கண்ணீர் வழியத் தலையாட்டுகிறார் கல்பட்டு ஐயா. முடிந்தது பயணம்தான், தேடல் அல்ல. சத்திய தருமச்சாலை பக்கத்தில் ஒரு குடிசையில் தவமிருக்கலானார் கல்பட்டு ஐயா.

அக்காலத்தே வெப்ப மிகுதியால் அவருக்கு உடம்பெல்லாம் சிரங்கு கண்டது. ஆனால், சாலை அன்பர்கள் அவருக்கு உணவு தரவும் மறந்தனர்.

வெளியூர் சென்றிருந்த வள்ளலார் திரும்பியதும் ‘கல்பட்டுக்கு உணவு போயிற்றா?’ என்று கேட்டார்.

எல்லோரும் கல்லாய்ச் சமைந்தனர். உண்மை புலப்பட்டது. தாமே உணவுக் கிண்ணத்துடன் கல்பட்டு ஐயாவிடம் சென்று கல்பட்டு ஐயாவின் கையில் தாமரை இலைவைத்து தமது கையால் உருட்டி சோற்றுக் கவளங்களை வைத்தார். வாங்கி வாங்கித் தின்றார் கல்பட்டு ஐயா.

‘வள்ளல் பெருமானுக்குத் தொல்லை தந்துவிட்டேனே’ என்ற ஆற்றாமையிலும் துடித்தார் கல்பட்டு ஐயா. ‘அடியாருக்கு சிவஞானிகள் தொண்டு செய்வது உண்டுங்காணும்’ என்று வள்ளலார் சிரித்தபடிக் கூறினார்கள்.

ஒரு நாள் மாட்டுவண்டி ஒன்றில் வள்ளலாரும் கல்பட்டு ஐயாவும் பயணம் செய்து கொண்டிருந்தனர். சற்று தூரம் சென்றதும் வள்ளலார் கல்பட்டு ஐயாவை நோக்கி ‘கிடக்க விரும்புதுங்காணும்’ என்று சொன்னார்கள்.

உடனே எம்பெருமான் தலையை தன் மடியில் தாங்கி தூங்க உதவிசெய்தார். பெருமானும் தூங்கலானார். வண்டி போய்க் கொண்டிருந்தது.

அச்சமயம் வள்ளல் பெருமானின் திருமுகத்தைக் குனிந்து பார்த்த கல்பட்டு ஐயா திடுக்கிட்டுப் போனார்.

பெருமானாரின் மூடிய கண்களிலிருந்து கண்ணீர் பெருக் கெடுத்து வழிந்து கொண்டிருந்தது. பெருகி வந்த கண்ணீர் தொடையை நனைத்து பின்னும் வழிந்து வண்டிப் பலகையை நனைத்தது.

கல்பட்டு ஐயாவின் மனம் பதை பதைத்தது. உடலில் நோவு ஏதும் கண்டதோ என்று எண்ணி கலங்கினார். எழுப்பவும் துணிவு வரவில்லை. அடுத்த ஊர் வந்தது.

பெருமான் கண் விழித்து எழுந்தார். என்ன குறை என்று சொல்ல வேண்டும் என்று கல்பட்டு ஐயா விநயமுடன் வேண்டிக் கொண்டார்.‘ப்ச்...அதற்கில்லைங்காணும் இந்த உலகமெல்லாம் இப்படி இருக்கிறதே என்கிறதுக்குத் தாங்காணும்!’ என்றார் பெருமான்.

வள்ளல் பெருமானுக்கு தொழுதூர் வேலாயுதம், கலு ங்குழி புருடோத்தமன், காரணப்பட்டு கந்தசாமி என்று எத்தனையோ அணுக்கத் தொண்டர்கள் இருந்தாலும் உலகுக்காக அவர் வடித்த ஏக்கக் கண்ணீரை ஏந்தும் பாக்கியம் கல்பட்டு ஐயாவுக்கு மட்டுமே கிடைத்தது.

இதைத்தான் “மனிதரை ஆட்கொண்ட வள்ளல்” என்று பாடுகிறது திருவாசகம்.

“தேன்பழச் சோலை பயிலும்
சிறுகுயி லேஇது கேள்நீ
வான்பழித்து இம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித்து உள்ளம் புகுந்து என்
உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித்து ஆண்ட மென் நோக்கி
மணாளனை நீவரக் கூவாய்.” (திருவாச.பா.351)

- தேனும் பழங்களும் நிறைந்த சோலைகளில் பழகும் சிறு குயிலே!
- நீ இதனைக் கேட்பாயாக!
- வானுலகத்தைவரை இகழந்து ஒதுக்கி விட்டு, இம்மண்ணுலகத்தவரை ஆட்கொண்ட வள்ளல் தன்மை உடையவன்.
- உடம்பு இகழ்ச்சிக்கு உரியது என்று ஒதுக்கிவிட்டு, உள்ளத்ததுள புகுந்து, உணர்வாய் ஒன்றிய ஒப்பற்றவன்.
- மானின் பார்வையை இகழும் அளவுக்கு மென்மையான பார்வை உடைய உமையின் கணவன்.
- அவனை வருமாறு கூவி அழைப்பாயாக!

## ஞானமும் முக்தியும் வேதாத்திரியம்

““தவபலமும்,தனையறிந்த நிலையும் கொண்டு
தனையடைந் தோர்க்கருள்புரியும் தகைமை யுள்ள
சிவநிலையோன் மெய்ஞ்ஞானி குருவாய் நின்று,
சீடனது புருவமையம் விரலால்தீண்ட,
அவனிலவன் லயமாகி ஆசான் தொட்ட,
அவ்விடத்தே ஞாபகத்தை ஒன்றி ஒன்றி,
உவமையிலாப் பேரின்பம் உள் உணர்ந்து.
ஒருமைத் தத்துவம் அறிந்தால், அதுவே முக்தி. (ஞாக.பா.1464) வ

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 5.அடியவர் ஆசையை அறுப்பான்

சுவாமி விவேகானந்தர் ஒரு சிறந்த சந்நியாசி. இவர் உலகுக்கு காதல், அன்பு, அமைதி மற்றும் புரிதல் குறித்து எடுத்துரைத்துள்ளார்.

ஆனால், சுவாமி விவேகானந்தருக்கே காதல் மற்றும் இணைப்பு குறித்து ஒரு விலைமாது பாடம் எடுத்துள்ளார் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

ஜெய்பூர்! சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா செல்வதற்கு முன்னர் சிறிது காலம் ஜெய்ப்பூரில் தங்கியிருந்தார்.

அப்போது ஜெய்பூர் மகாராஜா ஒரு பெரும் நடன விழாவை ஏற்பாடு செய்திருந்தார். அந்த விழாவில் பங்குக் கொள்ளுமாறு சுவாமி விவேகானந்தருக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

விலைமாது தான் ஏற்பாடு செய்திருந்த அந்த நடன விழாவில் கலந்துக் கொள்ள பலதரப்பட்ட மக்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார் ஜெய்பூர் அரசர்.

சுவாமி விவேகானந்தர் பங்கெடுத்துக் கொள்ளவிருந்த அதே விழாவில் ஒரு பிரபலமான விளை மாதுவும் பங்கு பெறவிருந்தார். விழா துவங்கிய சிறிது நேரத்திலேயே தனது தவறை உணர்ந்தார் ஜெய்பூர் அரசர்.

ஒரு சந்நியாசி பங்கு பெற்றுள்ள இந்த விழாவில் விலைமாது பங்குபெறுவது சரியானதாக இருக்காது என்பதை அறிந்தார்.

ஆனால், அரசர் சற்று தாமதமாகவே இதை அறிந்தார். அவர் ஏற்கனவே விலைமாதுவை அழைத்துவிட்டார். மேலும், விலைமாது அங்கு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டிருந்தது.

இளம் வயது... அப்போது சுவாமி விவேகானந்தர் மிகவும் இளம் வயது சந்நியாசியாக இருந்தார். தான் பங்கு பெற்றுள்ள நடன விழாவில் விலை மாது பங்கு பெற்றுள்ள செய்தி அறிந்து மன குழப்பத்திற்கு ஆளானார் விவேகானந்தர்.

முழுமையான சந்நியாச நிலை அடைந்திருந்தால், இது பெரும் மாற்றத்தை உணர செய்திருக்காது.

ஆசை! சுவாமி விவேகானந்தர் தனது ஆசைகளை அடக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, அந்த விழா நடந்து வந்த இடத்தில், ஒரு அறையில் தன்னைத் தானே பூட்டிக் கொண்டார்.

மேலும், அந்த அறையில் இருந்து வெளிவர மறுத்துவிட்டார். பலரும் அழைத்தும், சுவாமி விவேகானந்தர் அந்த பூட்டிய அறையில் இருந்து வெளிவரவே இல்லை.

ஜெய்பூர் அரசர் சுவாமி விவேகானந்தர் பூட்டிக் கொண்ட அறையின் அருகே வந்து அவரிடம் மன்னிப்புக் கோரினார். ஓர் சந்நியாசி பங்கு பெறும் விழாவில் எத்தகைய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதை நான் அறியேன் என்றும். நீங்கள் வந்து அழைக்கப்பட்ட நடன கலைஞர்களை சந்திக்க வேண்டும் என்றும் கோரினார்.

சுவாமி விவேகானந்தரின் பதட்டம் அவரது முகத்திலேயே தெரிந்தது. (சுவாமி விவேகானந்தர் பூட்டிய அறையைவிட்டு வெளியே வரவே இல்லை.)

அந்நேரம் விழாவில் இருந்த விலை மாது ஒரு பாடலை பாடத் துவங்கினார்.

அந்த பாடலின் பொருளானது, உன்னை போலவே நானும், நானாக சாதாரணமாக தான் இருக்கிறேன். நீ உன் மனதின் எண்ணங்கள் கொண்டு அச்சம் கொள்ள தேவையில்லை, என்பதாக இருந்தது.

சுவாமி விவேகானந்தரின் அச்சத்திற்கு காரணம் அந்த விலைமாது அல்ல, அவரது மனதில் ஏற்பட்ட குழப்ப எண்ணங்களே ஆகும்.

கதவுகள் திறந்தன... விலை மாதுவின் பாடல் வரிகளின் அர்த்தம் புரிந்து சுவாமி விவேகானந்தர் தான் பூட்டிய அறைகளின் கதவுகளை தானே திறந்து வெளியே வந்தார்.

அந்த விலை மாதுவை நேரில் கண்டு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

அந்த விலை மாதுவிடம் தூய்மையான மனது இருக்கிறது. அவர் அலட்சியத்தின் உண்மை பொருள் என்ன என்பதை தனக்கு தெளிவாக புரிய வைத்துவிட்டார் என்றும் சுவாமி விவேகானந்தர் கூறினார்.

விலை மாதுவுடனான இந்த சந்திப்புக்கு பிறகு சுவாமி விவேகானந்தர் மிகவும் தைரியமாகவும், அச்சம் இன்றியும் மாறினார்.

நம் அனைவருக்குள்ளும் இது போன்ற ஆசைகளும், அந்த ஆசைகள் சார்ந்த அச்சங்களும் இருக்கும். முதலில் அந்த ஆசைகளை பூட்டி வைக்காமல் திறந்து விட வேண்டும்.

பிறகு, நமது மனதை திறந்தபடியாக வைத்திருக்க வேண்டும். இது தேவையற்ற ஆசைகளை நம்மைவிட்டு வெளியேறவும், தேவையான வாய்ப்புகளை தவற விடாமல் இருக்கவும் உதவும்.

ஒரு வாய்ப்பு அல்லது சூழலை எதிர்கொள்ளாமல், அதில் வெற்றிப் பெற யார் நமக்கு சிறந்த வகையில் உதவுவார்கள் என நம்மால் அறியமுடியாது.

"சுந்தரத்து இன்பக் குயிலே
    சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்று இழிந்து இங்கு
    அடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவும்
   ஆகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச்
    சேவக னைவரக் கூவாய்". (திருவாச.பா.320)

- அழகிய இனிய குரலை உடைய குயிலே!
- ஒளியால் சூழப்பட்ட சிவலோகத்திலிருந்து இங்கே இறங்கி வந்து அடியார்களது பற்றுக்களை அறுப்பவன்.
- முதலும் நடுவும் முடிவுமாக இருப்பவன்.
- இந்த மூன்றுக்கும் அதிகாரிகளாக விளங்கும் (படைத்தல், காத்தல், அழித்தல்) பிரம்மா, திருமால், குணி உருத்திரன் ஆகிய மூவராலும் அறிய முடியாத குங்குமம் போன்ற சிவந்த திருவடிகளை உடையவன். அப்படிப்பட்ட வீரனை வருமாறு கூவி அழைப்பாயாக!

## ஆசையைச் சீரமைப்போம் – வேதாத்தரியம்.

"இச்சை எழும்போதே காரணம் கண்டிடு.
இச்சை முடித்திடச் சூழ்நிலை பார்த்திடு.
இச்சை முடிந்தால் எழும்விளைவை யூகி.
இச்சை முறையாய் இயங்கும் அமைதியிலே.

வாயு வேகம், மனோ வேகம் என்று சொல்வார்கள். மனம் வெகுவேகமாக இயங்கக்கூடியது. ஒரு நொடியில் பல நூறு ஆசைகளை உருவாக்கிக் கொள்ள முடியும். அவ்வளவு ஆசைகளையும் உடலைக் கொண்டு தானே நிறைவேற்ற வேண்டும்?

அதோடு அந்த ஆசைகளுக்குச் சமுதாய ஒப்புதல், இயற்கையின் ஒத்துழைப்பு ஆகியனவும் வேண்டும்.

ஆசைப்பட்டுக் கொண்டு இருப்பதனாலேயே நாளுக்கு நாள் மனம் தளர்ச்சி அடைந்து கொண்டே போகிறது; வாழ்க்கையில் வெற்றி கிட்டுவதில்லை. விரக்தி, வெறுப்பு ஆகியவை உண்டாகின்றன.

ஆசையைச் சீரமைத்துக் கொள்ளும் போது, மனம் மிகவும் இலேசாகி விடுகின்றது. ஆயிரமாயிரம் ஆசைகளை உருவாக்கி, அடக்கி வைத்துக் கொண்டு, உள்பாரம் கொண்டிருந்த நிலைமாறி, அந்தப் பளு இல்லாததனால் மனம் அமைதியாக இருக்கும்.

ஆசையின் மறுமலர்ச்சியே அறுகுணங்கள். ஆசை தடைப்படும்போது அத்தடையை நீக்க எழும் ஆர்வமே சினம்.

ஆசையுள்ள பொருட்களைத் தனக்கு வேண்டுமெனவும் பிறர் கவராமலும் பாதுகாத்துக் கொள்ளும் செயலே கடும் பற்று.

ஆணுக்குப் பெண் மீதோ, பெண்ணுக்கு ஆண்மீதோ முறையற்ற விருப்பம் எழுவது அதுவே மோகம்.

ஆசை பொருள், செல்வாக்கு, புகழ் இவற்றின் மீது அழுந்தி, அதைக் கொண்டு மக்களை உயர்வாக அல்லது தாழ்வாகக் கருதுவது மதம். சினத்தை முடிக்க வலுவையும் வாய்ப்பையும் நாடி நிற்கும் ஆசைதான் வஞ்சம்.

பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகியன அறுகுணங்கள் எனப்படும்.

ஆசையின் இயல்பறிந்து, அதை நலம் விளைக்கத் தக்க வகையில் பண்படுத்தி-ஒழுங்குபடுத்தி விட்டால், அதுவே ஞானமாக மலரும்.

ஆசையைச் சீரமைப்பது எப்படி? ஒவ்வொருவருக்கும் முக்கியமான சில ஆசைகள் இருக்கலாம். சின்னஞ்சிறிய ஆசைகள் பலவும் வந்து போகும்.

இந்த ஆசைகள் தேவைதானா? நிறைவு செய்து கொள்ள வசதி இருக்கிறதா? தேவை இல்லாத ஆசை எழுந்து, அதை நிறைவு செய்தால் பல துன்பங்கள் வரும்.

எனவே, ‘தேவையில்லாத ஆசையை விட்டு விடுவேன் என்று எண்ணிச் சங்கல்பம் மேற்கொள்ள வேண்டும்.

மீண்டும் ஒரு முறை அதே ஆசை எழுமேயானால், முன்பே எடுத்து வைத்திருக்கும் முடிவும் கூடவே வந்து, அந்த ஆசை காலப்போக்கில் மறைந்து விடும். தேவையும் வசதியும் ஒருங்கே இருந்தபோதிலும் கூடப் பின்விளைவு தீங்கு அளிக்குமெனில், அந்த ஆசையையும் விட்டு விட வேண்டியதுதான்.

நிறைவு செய்ய முடியாத நூறு ஆசைகளைக் குப்பையைப் போல மனத்தில் போட்டு வைத்துக் கொள்வதால் நன்மை இல்லை.

மனஅமைதி போய் விடும். மனத்தில் உள்ள பலம் போய்விடும். செயல்திறன் குன்றிப் போகும். உடல் நலம் குன்றிப் போகும்.

நற்குணங்கள் போகும். எரிச்சலும், கோபமும் அடிக்கடி வரும். முகத்தில் தெளிவுபோய், சோகம் படிந்து விடும். மனம் கலகலப்பாக இருக்காது. ஆசையை அடக்கினால், அது பிதுங்கிக் கொண்டு வெவ்வேறு துன்பங்களாக உருவாகும்.

ஆராய்ந்தால், பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும். ஆசை நிறை மனமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாகி வாழ்வின் இலட்சியமே நிறைவேறிய ஓர் உணர்வு உண்டாகும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6.ஆனந்தமே பிரம்மம்

இறைவனும் இயற்கையும் வேறு என்ற கருத்து நிலவுகிறது. நம் வேதங்களும், உபனிஷத்களும், இதிஹாச புராணங்களும் இரண்டும் ஒன்றே என்று உணர்த்துகின்றன. அதற்கு இக்கதை ஒரு சான்று.

ப்ருகு முனிவர் தன் தந்தை வருண பகவானிடம் (நீருக்கு அதிபதி) பிரம்மத்தை உணரும் வித்தையை போதிக்குமாறு பணிவுடன் கேட்கிறார்.

வருண பகவான் “தியானம், தவம் ஆகியவற்றின் மூலம் பிரம்மத்தை சுயமாக உணரமுடியும்” எனக்கூறி சில குறிப்புகளை அளித்தார்.

பிரம்மத்திலிருந்தே ஜீவராசிகள் பிறக்கின்றன, வாழ்ந்து மடியும்போது அந்த பிரம்மத்திடமே சென்றடைகின்றன, எனவே ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுமாறு ப்ருகுவை கேட்டுக் கொண்டார்.

தந்தை சொல்படி செய்த ப்ரஹு

- முதலில் “அன்னமே பிரம்மம்” என உணர்ந்தார். அதில் முழுத் திருப்தி இல்லாததால், தொடர்ந்து தியானத்தில் மூழ்கினார்.
- இப்பொழுது “ப்ராணமே பிரம்மம்” என உணர்ந்தார். அதிலும் முழுத் திருப்தி இல்லாததால், தொடர்ந்து தியானத்தில் மூழ்கினார்.
- மேலும் மனம், விஞ்ஞானம் என்ற நிலைகளைத் தாண்டி “ஆனந்தமே பிரம்மம்” என்பதை உணர்ந்தார்.

ப்ருகு ஒவ்வொரு கட்டத்திலும் உணர்ந்தது நமக்கு அடிப்படை உண்மையை உணர்த்துகிறது.

அன்னம் (உணவு) நம் உடலின் எரிபொருள். ப்ராணம் (மூச்சுக்காற்று) இருக்கும் வரை நாம் வாழ்கிறோம், அது நாம் வாழும் சூழலை குறிக்கிறது. நாம் நன்றாக வாழ தரமான உணவும் காற்றும் அத்யாவசியங்கள்.

மனம் என்பது எண்ணங்களையும் குறிக்கோள்களையும் உணத்துகிறது. விஞ்ஞானம் ஆழ்ந்த அறிவை குறிக்கிறது.

ஒருவருக்கு அத்யாவசிய தேவைகள் பூர்த்தியாகும் பொழுதே எண்ணங்கள், குறிக்கோள்கள், அறிவை வளர்த்துக் கொள்ளும் ஆர்வம் உண்டாகும். இறுதியாக ஆனந்தம் என்ற நிலை இவை அனைத்தையும் உணர்வதே. தொடக்கத்தில் உள்ள ஸ்லோகம் ப்ருகுவின் சுய உணர்தலே.

வேதாந்தம் எனப்படும் தத்துவம் உபநிடதங்களின் சாரம். வேதங்களின் அந்தமாக விளங்கும் உபநிடதங்கள் இந்தப் பிரபஞ்சம் குறித்தும் அதன் ஆதாரம் குறித்தும் தேடலை மேற்கொள்கின்றன.

இந்தத் தேடலில் பல்வேறு தத்துவங்களும் கருது கோள்களும் முன் வைக்கப்படுகின்றன.

கவித்துவமான முறையில் மிகச் சுருக்கமாகச் சொல்லப்படும் இந்தக் கருத்துகள் பல விதமான விவாதங்களுக்கும் விளக்கங்களுக்கும் வழி வகுக்கின்றன.

மனித வாழ்வையும் இந்தப் பிரபஞ்சத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பையும் பற்றிச் சிந்திக்க விரும்புபவர்களுக்குப் பல விஷயங்களை அள்ளித் தருவது வேதாந்தம்.

"ஆனந்தோ ப்ரஉற்மேதி வ்யஜானாத்!
ஆனந்தாத்த்யேவ கல்விமானி பதானி ஜாயந்தே!
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி!
ஆனந்தம் ப்ரயன்த்யபிஸம்விசந்தி! (தைத்தியோசநிஷதம் 3–6)

ஆனந்தம் பிரம்மம் என்ற (சாதகன்) ஞானத் தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.

பிறந்தவைளெல்லாம் ஆனந்த நத்திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனியுரிமையாகாது.

அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி, ஆனந்தத்தில் நிலைத்திருந்து, ஆனந்தத்தில் ஒடுங்குகின்றன.

ஆனந்தத்தை அறியாதார் யார்? ஆனந்தமில்லாது யார் உயிர் வா ழந் திருக்க முடியும்? உலப்பில்லா ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.

“இன்பந் தருவன் குயிலே
 ஏழுல கும்முழு தாளி
அன்பன் அமுது அளித்து ஊறும்
 ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவடு ஒத்த
 நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே
 கோகழி நாதனைக் கூவாய்.” (திருவாச.பா.353)

- மரக்கிளையில் அமர்ந்து இசைக்கும் குயிலே!
- எல்லா உயிர்களுக்கும் இன்பம் தருபவன்.
- மூவேழு உலகங்கள் முழுவதையும் ஆளுபவன்.
- அன்பர்களிடம் அன்பு உடையவன்.
- அமுதத்தை உள்ளே ஊறுமாறு செய்து. இன்பம் செய்பவன்.
- சிவனுலகிலிருந்து இறங்கி வந்த தேவர்களுக்கும் மேலானவன்.
- பொன்னும் மணியும் போன்ற நல்ல சிறப்பினை உடைய குதிரைகளின் மீது எழுந்தருளி வந்தவன்.
- திருப்பெருந் தறைத் தலைவன்.
- அவனைக் கூவி அழைப்பாயாக!

## இன்பநிலை எய்த வாரீர்! வேதாத்திரியம்

“அறிவானது நிறை நிலையை ஆதியாக
- அமைதி நிலையில் உணர்ந்து, அதுவாம் போது
அறிவு உயர்ந்தகன்று, அமைதிப் பேரின்பத்தில்
 அணுமுதலாய் அண்ட கோடி தானேயாக,
அறிவே அவ்வந் நிலையில் ஒழுங்கியக்க
 அமை பாப கி, முறைபிறழாது இயங்கும் மேலாம்,

அறிவின் பெருமை உணர்ந்த இன்பவெள்ளத்து
ஆனந்தத்தில் திளைக்க வாரீர்! வாரீர்! (ஞாக.பா..1236)

ஆனந்தத்தில் திளைக்க ஊரெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் பயிற்சி எடுத்து இன்பமாக வாழ்வோமாக.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 7. எல்லா உயிர்களுக்கும் அரசன்

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு காலம் எனம் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம் என்பது வேதாத்திரியக் கோட்பாடாகும்.

இறைவெளிக்கு தன்னைத் தானே இறுக்கிக் கொள்ளும் தன்மை உண்டு. இறை வெளியின் இந்தத் தன்னிறுக்கம்தான் அதன் தன்மாற்றத்திற்கான முழுமுதற் காரணம்.

எனவே இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்கின்ற காணாத அனைத்தும் சுத்த வெளியின் தன்மாற்ற வடிவங்களே என்கிறது வேதாத்திரியம்.

- சுத்தவெளி என்ற இறைநிலை நொறுங்கி இறைத்துகள் ஆயிற்று.
- இறைத்துகள்களின் தொகுப்பு தான் விண்.
- விண்களின் தொகுப்புகள்தான் தோற்றப்பொருட்கள் அனைத்தும் ஆகும்.
- விண்களின் சுற்றோட்டம் தோற்றப் பொருட்களில் சீரான முறையில் அமைந்தபோது உயிரினங்கள் தோன்றின.
- ஓர் அறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரை உயிரினங்கள் தோன்றின.
- முடிவில் சிறப்பான அறிவுடைய மனிதன் தோன்றினான்.

- இதுவே சுத்தவெளி எனும் இறைநிலையின் தன்மாற்ற வரலாறு ஆகும்.

வேதாத்திரியம் விளக்கும் தத்துவம் இதுவாகும்.

வெட்டவெளியைப் பற்றி பாரதியார் பாடுகிறார். . . .

"வெட்ட வெளியாய் அறிவாய் வேறுபல சத்திகளைக்
கொட்டு முகிலாய் அணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்
தூல அணுக்களாய் சூக்குமமாய் சூக்குமத்தில்
சாலவுமே நுண்ணியதாய் தன்மையெலாம் தானாகி
தன்மை ஒன்றில்லாததுவாய் தானே ஒருபொருளாய்
தன்மை பலவுடைத்தாய் தான்பலவாய் நிற்பதுவே" (பாரதியார்)

இதைத்தான் "எல்லா உயிர்களுக்கும் அரசன்" என்று திருவாசகம் பாடுகிறது

"உன்னை உகப்பன் குயிலே
உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய்". (திருவாச.பா.354)

- குயிலே!
- உன்னை நான் விரும்புவேன்.
- உனக்கு உதவி செய்யும் தோழியாகவும் விளங்குவேன்.
- பொன்னை விடவும் சிறப்புடைய புகழ் பொருந்திய திருமேனியோடு அழகுடன் விளங்குபவன்.
- எல்லா உயிர்களுக்கும் அரசன்.
- குதிரைமீது எழுந்தருளி வந்த வள்ளல் தன்மை உடையவன்.

- திருப்பெருந் துறையில் எழுந்தருளி உள்ள பாண்டியன், சேரன், சோழன்.
- பாம்பினை அணிகலனாக அணிந்திருப்பவன்.
- அவனை வருமாறு கூவி அழைப்பாயாக!

## பிரபஞ்ச இரகசியங்கள் - வேதாத்திரியம்

“பேரியக்க மண்டலத்தைத் தத்துவங்கள்
பத்தாக விளங்கிக் கொள்வோம்.
பெரியசுமை மனதிலிருந் திறங்கிவிடும்.
மனம்அறிவாம் சிவமு மாகும்.

ஓரியக்க மற்றநிலை வெட்டவெளி
இருப்பதுவே; ஆதியாகும்.
உள்ளமைந்த ஆற்றலே உருண்டியங்கும்
விண்ணாகும். அதிலெ ழுந்த

நேரியக்க விரிவுஅலை நெடுவெளியில்
கலப்புறவான் காந்த மாச்சு.
நிகழ்காந்தத் தன்மாற்றம் அழுத்தம்ஒலி
ஒளிசுவையும் மணம்மனம்ஆம்.

சீரியக்கச் சிறப்புகளை விளைவுகளை
உள்ளுணர்ந்தால் அதுமெய்ஞ் ஞானம்.
சிந்திப்போம், உணர்ந்திடுவோம், சேர்ந்திருப்போம்
இறைநிலையோ டென்றும் எங்கும்!” (ஞாக.பா.1674)

முதலில் தோன்றிய விண் மகன். முதல் விண்ணிலிருந்து இரண்டாவதாகத் தோன்றிய நிழல்-விண்ணோ இறைவெளிக்குப் பேரன்.

பேரன் எங்கே போனாலும் தாத்தாவுடன் சேர்ந்து கொண்டான். நிழல் விண் இறைவெளியோடு கலந்துவிட்டது தான் காந்தம்.

அப்படியானால் தாத்தாவும், பேரனும் அதாவது இறைவெளியும், நிழல் விண்ணும் ஆடும் கூத்துத் தான் பிரபஞ்சம்.

இறைவெளியில் நிழல் விண்கரைந்த நிலை காந்தம். காந்தம் தான் அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக, மனமாகப் பிரபஞ்சம் முழுவதிலும் எல்லாப் பொருளிலும் இருக்கிறது.

இறைவெளி என்ற தாத்தாவும், நிழல் விண் என்ற பேரனும் ஆடுகிற கூத்துத் தானே இவையனைத்தும்!

இறைவெளி புலன்களுக்கு எட்டாது இருந்ததனால் அதை விவரித்துச் சொல்ல முடியவில்லை.

ஆனால், எப்படித் தத்துவஞானிகள் கண்டு பிடித்தார்கள்? மனம் சுழல் விரைவு அதிகமாயிருக்கிறபோது அது அலை. அலைக்கு அடித்தளமாக இருப்பது இறைநிலை. இறை நிலையிலிருந்து அலை விலகி நிற்கிற மாதிரி இருக்கும்.

ஆனால், மன அலைச் சுழல் விரைவு குறையக் குறைய, இறையுணர்வும் இறையாற்றலும் அந்த மனத்திற்கு வலுவைத் தருகின்றன.

அப்படியே அந்த இறை நிலையோடு நெருங்கி இருக்கிறபோது, மனம் இறை நிலையைத் தெரிந்து கொள்கிறது.

இறை நிலையிலிருந்து தானே எல்லாமே வந்தன? எல்லா இயக்கங்களும், பதிவுகளும் வான்காந்தத்தில் தான் இருக்கின்றன.

அதோடு மனம் இணைகிறபோது அங்கிருக்கக்கூடிய உண்மைகள் எல்லாம் தெரிகின்றன. நேற்று நடந்த செயலை நினைத்தால் நினைவிற்கு வருகிறது போலத் தனக்குள்ளாகவே பிரபஞ்ச ரகசியங்கள் தெரியும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 8. மகான்களின் பார்வையில் வெட்டவெளி.

## வேதாத்திரி மகரிஷி பார்வையில் வெட்டவெளி

- அறிவும் ஆற்றலுமான வெட்டவெளியே தெய்வம்
- வெட்டவெளி ஒன்றே சுயம். சுயத்திற்குப் பலபல பெயர்கள் உண்டு.
- வெட்டவெளியின் தன்னிறுக்கமே அதன் எழுச்சிக்கு முழுமுதற்காரணம்.
- எழுச்சியடைந்த வெட்டவெளியின் பின்னமே துகள். துகள்களின் சுழற்சியால் வெட்டவெளியில் எழும் அலைகளே காந்த அலைகளாகும்.

வெட்டவெளி சக்தி என்பதில்லையானால்
வேறு எந்தப்பொருள் வலிது பிரபஞ்சத்தில்?
தொட்ட, தொடப்பட்ட இரு பொருட்களூடே
தொட, தொட்டதாய் என்னும் அரூபம் யாது?
பட்டப் பகலில் வானில் மீன்கள் தோன்றா.
பார்வையில்லார்க்கவை எந்த நாளும் காணா,
எட்டவில்லை அறிவிற்கு என்றால், உள்ள
தத்துவம் எங்கே ஒளிந்து கொள்ளும்?."(ஞாக.பா.1417

## அழுகணி சத்தர் பார்வையில் வெட்டவெளி

"மூலப் பதியடியோ மூவிரண்டு வீட்டிலே
கோலப்பதிப்பாடியோ குதர்க்கந்தெரு நடுவே
சாலப்பதிதனிலே தணலாய் வளர்ந்தகம்பம்
மேல்பதிதனிலே – என் கண்ணம்மா

விடையாட்டைப் பாரேனோ"

வெட்டுண்ட சக்கரத்தால் வேணதனமளித்துக்
குட்டுண்டு நின்றேண்டி கோடிமனு முன்னாலே
குட்டுண்டு நில்லாமற் கோடிமன முன்னாக
வெட்டுண்டு பிணி நீக்கி – என் கண்ணம்மா
விழித்து வெளிக்காட்டாயோ"

## கடுவெளிச் சித்தர் பார்வையில் வெட்டவெளி

"மெய்ஞ்ஞானப் பாதையிலேறு – சுத்த
வேதாந்தவெட்ட வெளியினைத் தேறு"
"எட்டு மிரண்டையும் மோர்ந்து – மறை
எல்லா முனக்குள்ளே ஏமாய்த் – தேர்ந்து
வெட்ட வெளினைச் சார்ந்து – ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து"

## குதம்பைச் சித்தர் பார்வையில் வெட்டவெளி

"வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய்
பட்டயம் ஏதுக்கடி?"

"வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு
மோகாந்த மேதுக்கடி - குதம்பாய்
மோகாந்த மேதுக்கடி."

"வானகத்தில் நாட்டம் கொண்டால் உனக்கு என்றும்
கொண்டாட்டம்." (வானகம் - வெட்டவெளி.)

## இடைக்காட்டுச் சித்தர் பார்வையில் வெட்டவெளி

"பாழ்வெளியை நோக்கியே தும்பீபற – மாயைப்
பற்றற்றோ மென்றோநீ தும்பீபற
வேவா திருந்திடப் பால்கற – வெறு

வெட்ட வெளிக்குள்ளே பால்கற.
அண்ணாவின் மேல்வரும் பால்கற –பேர்
அண்டத்திலூறிடும் பால்கற.”

## அகப்பேய் சித்தர் பார்வையில் வெட்டவெளி

““வீடும் வெளியாமோ அகப்பேய்
மெய்யாக வேண்டாவோ.
பரத்துக் கருத்தவிடம் அகப்பேய்
பாழது கண்டாயே.
தோன்றமற் தோன்றிடும் அகப்பேய்”

## தாயுமானவர் பார்வையில் வெட்டவெளி

“நித்தியமாய் “நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற வொன்றைச் சுகாரம்பப்
பெருவெளியைச் சிந்தை செய்வோம்.”
“பெருவெளியாய் ஐம்பூதம் பிறப்பிபிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவும் அன்புரைக்கோத் தர விழுங்கிக்
கொண்டப் பாலுந்
தெரவரிதாய்க் கலந்தெந்தப் பொருளந்தப் பொறுளிணையாஞ்
சிந்தை செய்வோம்.”

## இராமலிங்க வள்ளலார் பார்வையில் வெட்டவெளி

“அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலாவே – ஐயர்

ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலாவே"

## இரமணர் பார்வையில் வெட்டவெளி

"போக்கும் வரவுமில் பொது வெளியினிலருப்
போரட்டங்காட் டருணாசலா
மொட்டையடித் தெனை வெட்ட வெளியி நீ
நட்ட மாடினை யென் னருணாசலா
ராப்பகலில்லா வெறு வெளி வீட்டில்
ரமித்தடுவோம் வாவருணாசலா"

வெட்ட வெளியைத்தான் " அண்டம் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்" என்று திருவாசகம் புகழ்கிறது.

வாஇங்கே நீகுயிற் பிள்ளாய்
  மாலொடு நான்முகன் தேடி
ஓவியவர் உன்னி நிற்ப
  ஒண்தழல் விண்பிளந்து ஓங்கி
மேவிஅன்று அண்டம் கடந்து
  விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன்
  தாழ்சடை யோன்வரக் கூவாய்." (திருவாச.பா.355)

- இளம் குயிலே! இங்கே வா!
- திருமாலும் பிரம்மனும் அடிக்காண முடியாது, நீங்கி, வியந்து நிற்கும் வண்ணம் ஒளி மிக்க தூணாய்,
- வானைப் பிளந்து.அண்டங்களைக் கடந்து நின்ற, விரியும் ஒழப்பிழம்பான உண்மையன்.
- பாய்ந்து வரும் குதிரையைச் செலுத்தி வந்த பாகன்.
- நீண்ட சடையினை உடையவன்.
- அவனை வருமாறு கூவி அழைப்பாபாயகா!

## வெட்டவெளியே பேராற்றல் உடைய இறைநிலை

“வெட்டவெளி சக்தியென்பது இல்லை. ஆனால்,
    வேறுஎந்தப் பொருள் வலிது பிரபஞ் சத்தில்?
தொட, தொடப்பட்ட இருசீவர்களுக் குள்ளே,
    தொட தொட்டதாய் எண்ணும் அறிவு யாது? வெளிதான்!
பட்டப்பகலில் வானில் விண்மீன் தோன்றா.
    பார்வை இல்லார்க்கு அவை எப்பொழுதும் காணா
எட்டவில்லை அறிவுக்கு என்றால், அந்த
    இயற்கைத் த   தத்துவம் எங்கே ஒளிந்து கொள்ளும்?
அறிவோம்!

வெட்டவெளியே அனைத்தும். வெட்டவெளியே நாம் காணும் காணாத அனைத்து அனைத்து உருவங்களும். வெட்டவெளி இரகசியத்தை உணர்ந்து தெளிந்து ஆனந்தமாக வாழ்வோமாக. வாழ்க வளமுடன்.

# 9. பாசம் அறுத்து எனை ஆண்டவன்

கோவிலில் தேங்காய் உடைப்பதில் உள்ள தத்துவம் – அறியாத புராண கதை

விநாயகருக்கும், சிவனுக்கும் மூன்று கண்கள் இருப்பதைப் போலத் தேங்காய்க்கும் மூன்று கண்கள் இருப்பது, அதற்குரிய மிக முக்கிய மான சிறப்பு. வழிபாட்டுக்குப் பயன்பட இது முக்கிய காரணம்.

வழி பாட்டில் தேங்காயை பயன்படுத்த எந்தவித வரம்புகளும் இல்லை . இதனை இந்து சமயத்தவர் அனைவரும் பயன்படுத்துகின்றனர்.

மக்கள் இரு கண்களுடன், நன்கு பக்குவப்பட்ட பின்னர் அகக்கண் அல்லது ஞானக் கண்ணைப் பெறுகின்றனர்.

பக்குவமுடைய மனமே இறை வ னை வழிபடத்தக்கது. பக்குவ நிலையறிதல், தேங்காய்க்கும், மனத்திற்கும் பொது. பக்குவம் குலைந்தால் தேங்காயும், மனமும் அழுகிவிடும்.

நம்முடைய வேண்டுதல் நிறைவேற கோவிலுக்கு சென்று தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து இறைவனை வழிபடுகிறோம்.

எதனால் இந்த வழிபாடு என்பதற்கான காரணம் வியப்பிற்குரியது.

விநாயகர் ஒருமுறை தன் தந்தையிடம் உன் தலையை எனக்கு பலி கொடு என்று கேட்டாராம், இதன் காரணமாகவே தனது அம்சமாக மூன்று கண்களை கொண்ட தேங்காயை சிவன் படைத்தார் என்கிறது புராண கதை.

இதன் காரணமாகவே வேண்டுதல் விரைவில் நிறைவேற பக்தர்கள் விநாயகருக்கு சிதறு தேங்காய் உடைக்கின்றனர்.

தேங்காய்-மும்மலம், நீர்-உயிர். தேங்காயின் மட்டை, நார், ஓட்டு ப்பகுதிகள் என்ற மூன்றும் மும்மலங்கள் ஆகும்.

இவை படிப்படியே களையப்பட்டவுடன், இறுதியில் அகங்கார ஓடும் நொறுங்க, உடனே வெண்மை தூய்மை பிரகாசிக்கிறது.

தேங்காய்-இதயம்; மூன்றாம் கண்-ஞானக் கண், வெண்மை-சத்துவ குணம். "சத்துவ குணத்துடன் சஞ்சலமில்லாமல், ஞானக் கண்ணால் இறைவனை தரிசிக்கும்போது, தோன்றும் பக்தி உணர்வுகளை இதயம் உணர்கிறது." என்ற உட்பொருளைத் தேங்காய் உணர்த்துகிறது






“ஆனதே பதியது அற்றதே பசுபாசம்
போனவே மலங்களும் புலன்களும் வினைகளும்
கானகத்தி லிட்டதீயிற் காற்றுவந் தடுத்ததோ
ஊனகத்தில் வாயுவன்னி யொன்றியே யுலாவுமே.”
சிவவாக்கியர் பாடல்கள் – 453

ஞான யோகத்தால் நம் உடலில் உள்ள சுத்த தீயும் வாயுவும் ஒன்றாகி உலவினால், காற்றுடன் சேர்ந்த காட்டுத்தீ போல உடலெங்கும் பரவும். பதி, பசு, பாசம் ஆகிய மூன்றில் பதியாம் ஈசன் எப்போதும் உடலில் உள்ளது.

பசுவாம் ஆன்மாவும், பாசமாம் மனமும் அற்றுப் போய்விடும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் போய்விடும். ஐம்புலன்கள் ஒடுங்கிவிடும். வினைகள் அனைத்தும் விலகிவிடும்.

“காருடைப் பொன்திகழ் மேனிக்
    கடிபொழில் வாழும் குயிலே
சீருடைச் செங்கம லத்தில்
    திகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
    பாசம் அறுத்து எனை ஆண்ட
ஆருடை அம்பொனின் மேனி
    அமுதினை நீவரக் கூவாய்.” (திருவாச.பா.356)

- பொன் போன்ற நிறமுடைய மகரந்தமும். மணமும் உடைய பூக்கள் நிறைந்த சோலையில் வாழும் கரிய நிறமுடைய குயிலே!
- சிறந்த செந்தாமரை மலர் போன்ற மேனி நிறமுடைய செழிப்பானவன்.
- இந்நிலவுலகில் எழுந்தருளி வந்து, தன்னுடைய திருவடிகளை நான் காணுமாறு காட்டியவன்.
- என்னுடைய மும்மலங்களைக் கழுவியவன்.
- என்னை ஆட்கொண்டவன்.
- ஆத்திமாலை சூடிய பொன்போன்ற திருமேனியை உடையவன்.
- அமுதம் போல இனிமை செய்பவன்.

- அவனை வருமாறு கூவி அழைப்பாயகா!

## பழிச்செயல் தூய்மை பெறுவோம் – வேதாத்திரியம்

“தவம், அறம், உடற்பயிற்சி, இயற்கை, உண்மை,
    தத்துவங்கள், உலக சமாதானம் எல்லாம்
தவ உலகீர், பேசுதற்கு மட்டும் அல்ல!
    நாம்நலமாய் வாழ்ந்திடவே தேவை! தேவை!
பவ வினைகள் எண்ணற்றதாற்றி, வாழ்ந்த
    பதிவுகளால் உடல் நோய்கள், மனக்குழப்பம்,
அவ ரவர்கள் செயல்மூலம் திருத்தம்பெற்று,
    அறிவு விழிப்பில் வாழ, எவர்க்கும் தேவை!” (ஞாக.பா.1619)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 10. பிரம்மமே அறிவு, அதுவே “நான்”

நான் யார்? பொருளா? சக்தியா? உடலா? அறிவா? உயிரா? இவை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியுமா? என ஆழ்ந்து சிந்தித்தால் இவற்றில் எதுவும் தனித்து இல்லை.

எல்லாம் சேர்ந்த ஒரு இயக்கச் சிறப்பே “நான்” என அறிவோம். உடல் வரையில் எல்லை கட்டி அது வரையில் “நான்” என்று எண்ணியிருந்த காலமும் உண்டு. அன்றுவரை அறிவு அறிந்திருந்த பக்குவ நிலை அது.

உருவத்தை ஆராயுங்கால் அது அணுக்களின் கூட்டமாகத் தோன்றுகிறது. அறிவை நோக்கி ஆராயுங்கால் அது உடலியக்க சக்தியின் ஒரு பிரிவு இயக்கம் என விளங்குகின்றது.

சக்தி என்பது என்ன என ஆராயுங்கால் அது எங்கும் நிறைந்த ஒரு அகண்டாகாரப் பெருவெளியின் எழுச்சி அணுவின் மூலம் இயக்க வேகமான நிலை எனத் தெளிவாகி விடுகின்றது.

ஆகவே அகன்ற பெருவெளியாக, அணுவாக, இயக்கச் சக்தியாக, அறிவாக இருக்கும் பல்வேறு நிலைகளும் ஒன்றாகக் காட்டும் ஒரு பேரியக்கமே “நான்” எனப்படுவது.

ஒளி அல்லது ஒலி எழுச்சி பெறும் பொருட்களின் நிலை, இயக்கம் இவைகளுக்கேற்ப பலபேத அளவாக இருந்த போதிலும் ஒளி, ஒலி என்ற தத்துவத்தில் வேறுபட்டவை அல்ல.

அதுபோலவே எல்லா சீவன்களிலும் உள்ள அறிவு பலபேத நிலைகளில் இயங்கிய போதிலும் அறிவு என்ற தத்துவத்தில் ஒன்றே.

ஆகவே “நான்” பரவெளி என்ற நிலையில் எங்கும் நிறைந்த பூரணமாகவும், சக்தி என்ற நிலையில் அணுக்களின் கூட்டுப் பக்குவ பரிணாம சந்தர்ப்பச் சந்திப்புகளுக்கேற்ப பலவித இயக்க வேறுபாடுகளாகவும்,

அறிவு என்ற நிலையில் அந்தந்த ஜீவராசிகளின் புலன் அமைப்பு, தேவை, பழக்கம், சூழ்நிலை, அனுபவம் இவைகளுக்குப் பல பேதப்பட்ட நிலைகளாகவும் உருவம் என்ற நிலையில்

அணுக்களின் கூடுதலுக்கேற்ப பலவித அமைப்புகளாகவும் இருக்கிறேன் எனக் கொள்ளுதல் சரியான முடிவாகும்.

எனவே நான் வேறு, பிரபஞ்சம் வேறு அல்ல. நான் வேறு, இயற்கை வேறு அல்ல. நான் என்பதை எதிலிருந்தும் பிரித்து எடுக்கவோ, பிரித்துப் பேசவோ முடியாது. ஒன்றாகவும் பலவாகவும் எல்லாமாக ஏகத் தொடர் நிலையில் இருப்பதே “நான்” என்பதாகும்.

அரூப நிலையில் ஏகனாக, உருவ நிலையில் சிதறுண்டு தோன்றும் பலவாக, அரூபத்தில் உருவங்கள் அனைத்தும் அடக்கம் பெற்றும், உருவங்கள் அனைத்திலும் அரூப நிலை நிறைந்தும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத அகன்ற பேரியக்கமாகிய தத்துவமே "நான்" என்பதாகும்.

.

## தன்னை யறிந்தால் கடவுளை அறியலாம் – வேதாத்திரியம்

"உன்னையோ கடவுளையோ அறிய வென்றால்
ஒரு குறுக்கு வழியுண்டு; உள்ளுணர்ந்து
தன்னையறிந் தந்நிலையில் நிலைத்து வாழும்
தனிக்கருணை வடிவான குரு வடைந்தால்
அன்னை வயிற்றடைந்துருவாய் உடலாய் வந்த
ஆதி கருவைப் புருவத்திடையுணர்த்தப்
பின்னை நீ அவ்விடத்தில் நிலைக்க, உந்தன்
பேதமற்ற நிலை, கடவுளாகி நிற்கும்"..
வேதாத்திரி மகரிஷி

இந்த தத்துவத்தை உணர்ந்த மாணிக்கவாசகர் " எந்தம ராம்இவன் என்று இங்கு என்னையும் ஆட்கொண்டு" என்று திருவாசகத்தில் பாடுகிறார்.

"கொந்தணவும் பொழில் சோலைக்
கூங்குயி லேயிது கேள்நீ
அந்தண னாகி வந்து இங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தம ராம்இவன் என்று இங்கு
என்னையும் ஆட்கொண்டு அருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர் பிரான்வரக் கூவாய்." (திருவாச.பா.357)

- கொத்தாக மலர்ந்திருக்கும் மலர்களை உடைய பெரிய சோலைகளில் கூவும் குயிலே!
- இதை நீ கேட்பாயாக!
- அந்தணர் வேடத்தில் வந்து. இங்கு தனது அழகிய சிவந்த திருவடிகளைக் காட்டியவன்.
- "இவனும் என் உறவினர்ளுள் ஒருவன்" என்று என்னையும் ஆட்கொண்டு. அருள் செய்தவன்.
- சிவந்த நெருப்புப் போன்ற திருமேனியை உடைய தேவர் பிரான்.
- அவனை வருமாறு கூவி அழைப்பாயாக!

## பிரம்மமே அறிவு, அதுவே "நான்" – வேதாத்திரியம்

""நான்யார்?" யார்என்றறியும் பேரர்வத் தாலே,
நாட்கள் மாதம் ஆண்டு பலப்பல கழித்தேன்.
ஊன்உருவில் உள்ளியங்கும் சூக்குமத்தை, உயிராய்
உணர்ந்தபின்னர். உயிர்ச்சுழலின் அலைகாந்தம் கண்டேன்.
வான்பொருளாம் காந்தமது பஞ்சதன் மாத்திரையாய்
வாழும்உயிரில்மணமுமாய் இயங்கக் கண்டேன்!
மேன்மையான இவ்வரிசைகளின்காந்தஆற்ற லுக்குள்,
மிகச்சிறந்த இறைநிலையும் அறிவும் ஒன்றாய்க் கண்டேன்!"
(ஞாக.பா.1726)

பிரம்மமே நான் என்ற இறையுணர்வுடன் வாழ்க்கையில் பயணித்தால் எப்பொழுதும் ஆனந்தமே! ஆனந்தம்! ஆனந்தமே!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!

## வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயில் பத்து

## YOUTUBE LINKS

## இதனுள்ளே

1. சுத்தவெளியே மெய்ப்பொருள் https://youtu.be/uoqFaUDwEOo

2. வீட்டின்பம் வழங்கியவன் https://youtu.be/JCPo9JEtn1I
3. .பிரம்ம ஞானம் https://youtu.be/5378pX9u2eY
4. ஆட்கொண்ட வள்ளல் https://youtu.be/KExYG6exEP0
5. அடியவர் ஆசையை அறுப்பான் https://youtu.be/qEl9zSYBpag
6. ஆனந்தமே பிரம்மம் https://youtu.be/mk-ByO81mx4
7. எல்லா உயிர்களுக்கும் அரசன் https://youtu.be/HU7z_Z5UiQg
8. மகான்களின் பார்வையில் வெட்டவெளி https://youtu.be/dCbU99m-d-k
9. பாசம் அறுத்து எனை ஆண்டவன் https://youtu.be/UHzQs0_hE8o
10. பிரம்மமே அறிவு, அதுவே “நான்” https://youtu.be/gmjQ00qWnQ

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
7. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
8. ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
9. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
10. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.

# பானுகுமார் படைப்புலகம்

(145 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)

4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்

9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.

9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar வஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.


1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து

27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்

62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்

97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஒளவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108..Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
வாழாப்பத்து


vazhga valamudan
MANNARGUDI BANUKUMAR
FOUNDATION TRUST
MANNARGUDI BANUKUMAR
FREE PDF DIRECTORIES
With links to over 2,000 video and audio
recordings. on YouTube...


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அச்சோ பதிகம்...


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
ஆசைப்
பத்து...



வேதாத்திரியப்
பார்வையில்
வறுமை
என்பது
இல்லை...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குழைத்தப் பத்து...
பானுகுமார்.


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
செத்திலாப்
பத்து...
அருள்நிதி
பானுகுமார்.


வேதாத்திரியப் பார்வையில்




வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குயில் பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அருட்பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அற்புதப் பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அன்னைப்பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
கண்ட பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குலாப்பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
சென்னிப் பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
புணர்ச்சிப்பத்து


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
ஆனந்த
பரவசம்